தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென் கடலோர மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

தென் கடலோர தமிழகத்தில் ஆங்காங்கே வியாழக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் அதிகபட்சமாக 160 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மேலும், கொள்ளிடத்தில் 80 மி.மீ, சிதம்பரத்தில் 70 மி.மீ, தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் 50 மீ.மீ, கடலூர் மாவட்டம், கே.எம்.கோவில், ஆடுதுறை, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் தலா 40 மி.மீட்டர் பதிவாகியுள்ளது.

**முன்னறிவிப்பு:**

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருக்கும் காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தென் கடலோர தமிழகம், டெல்டா மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்யும். மற்ற கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை யைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இருப்பினும் நகரின் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யும். அடுத்து வரும் நான்கு நாள்களில் உள் தமிழகத்தில் மழை குறையும்.

### கோவிலாங்குளத்தில் தென்மண்டல வேளாண். ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்

விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளத்தில் தென்மண்டல வேளாண் ஆராய்ச்சி, விரிவாக்க ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த

வேளாண்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில். விஞ்ஞானிகளுடன் விவசாயிகள் கலந்து கொண்டு இதர துறை சார்ந்த தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் பிரச்னைகள் குறித்து விவாதித்தனர். முன்னதாக, மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பால்பாண்டி வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் மகேஸ்வரன் தலைமை வகித்தார். இதில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் பொன்னுச்சாமி, பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை இயக்குநர் அனந்தகுமார், பயிர் பாதுகாப்பு துறை இயக்குநர் ராமராஜூ, விருதுநகர் மாவட்ட இணை வேளாண்மை இயக்குனர் சுப்பையா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மண்டல ஆராய்ச்சி நிலைய உழவியல் துறை பேராசிரியர் செந்திவேல் நன்றி கூறினார்.

## 10 டன் பருத்தி ரூ.5.50 லட்சத்துக்கு விற்பனை

போச்சம்பள்ளி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் முதல் முதலாக புதன்கிழமை பருத்தி ஏலம் தொடங்கப்பட்டு, 10 டன் பருத்தி மூட்டைகள் ரூ.5.50 லட்சத்துக்கு ஏலம் போயின. போச்சம்பள்ளியில் எஸ்.495 கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பருத்தி ஏலத்தை புதன்கிழமை அந்தச் சங்கத் தலைவர் கே.பி.தூயமணி தலைமை வகித்து தொடக்கிவைத்தார். ஏலத்துக்கு, போச்சம்பள்ளி, மகாதேவகொல்லஹள்ளி, அங்கம்பட்டி, புளியம்பட்டி, பாளேதோட்டம், ஜம்புகுட்டப்பட்டி, குள்ளனூர், கோட்டானூர், காரிமங்கலம் உள்பட சுற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் வரலட்சுமி, டென்னி ரகத்தைச் சேர்ந்த 10 டன் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், ஒரு குவிண்டால் டென்னி ரூ. 4,200 முதல் ரூ.4,800 வரையும், வரலட்சுமி ரூ.4,600 முதல் ரூ.4,800 வரையும் ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு வந்த 10 டன் பருத்தி மூட்டைகள் ரூ.5.50 லட்சத்துக்கு

ஏலம் போயின. போச்சம்பள்ளியில் முதல் முதலாக புதன்கிழமை பருத்தி ஏலம் தொடங்கியதை அடுத்து, வாரம் தோறும் பருத்தி ஏலம் நடைபெறும் என தலைவர் தெரிவித்தார். இதில், இணைப் பதிவாளர் ராஜேந்திரன், துணைத் தலைவர் கே.சி.நாகராஜன், இயக்குநர்கள் சித்ரா ராமசாமி, பழனி, கலைச்செல்வி விமலன், மைந்தன் உள்ளிடோர் கலந்து கொண்டனர்.

**<u>மக்காச்சோளத்தின் மகிமை: குறுகிய காலத்தில் அதிக லாபம்!</u>**



குறுகிய காலப் பயிராகவும், அதிக லாபம் ஈட்டும் பயிராகவும் உள்ள மக்காச்சோளத்தைப் பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என திரூர் நெல் வேளாண்மை அறிவியல் நிலையத்தினர் தெரிவித்தனர். விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற 100 முதல் 105 நாள்களில் மகத்தான மகசூலையும் வருவாயையும் ஈட்டித் தரும் மக்காச்சோளத்தை சாகுபடி செய்யலாம். இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் தெரிவித்த தகவல்கள்: பயிரிடும் காலம்: குறுகிய காலப் பயிரான மக்காச்சோளத்தில் கோ ஹைச் (எம்) 5 வீரிய ஒட்டு ரகங்களைப் பயிரிடலாம். இதை டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை பயிரிடலாம். சிறப்புகள்: அதிக மகசூல் தரும் ஒட்டு ரகங்கள், அடிச் சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. தண்டு துளைப்பான் பூச்சித் தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. பெரிய மஞ்சள் நிற தானியம். 68.7 சதவீத மாவுச் சத்து, 8.23 புரதச் சத்து உடையது. விதை உற்பத்தி செய்வது எளிது. உரமிடுதல், பயிர் பாதுகாப்பு முறைகள்: மண்ணின் வளத்தை மேம்படுத்த ஏக்கருக்கு 5 டன் தொழு உரமிட வேண்டும். பொதுப் பரிந்துரையான 54 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து தரவல்ல உரங்களை இட வேண்டும். 30 கிலோ

யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 33 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இட வேண்டும். நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறையைத் தவிர்க்க ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்ட உரக் கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து விதைகளை ஊன்றுவதற்கு முன் மேலுரமாக இட வேண்டும். மண்ணின் தன்மைக்கு ஏற்றாற் போல் 10 முதல் 12 நாள்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட வேண்டும். குருத்துப்புழு, சாம்பல் வண்டைக் கட்டுப்படுத்த எண்டோசல்பான் 4டி அல்லது பாசலோன் 4 கிலோ தூளை 16 கிலோ மணலுடன் கலந்து இலையும், தண்டுப் பகுதியும் சேரும் இடங்களில் உள்ள இடைவெளியில் இடவேண்டும். விதைமூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்திட ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து 24 மணிநேரம் கழித்து தலா ஒரு பாக்கெட் அசோஸ்பரில்லம், பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் அந்த விதையை விதைப்பு செய்ய வேண்டும். அறுவடை முறை: மக்காச்சோளக் கதிரின் மூடிய உறை மஞ்சளாகவும், விதைகள் சற்று கடினமாகவும் மாறிய பின் கதிரை மட்டும் தனியாக அறுவடை செய்ய வேண்டும். மக்காச்சோளத் தட்டையை காயவிடாமல் பச்சையாக அறுவடை செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுத்தலாம். ஏக்கருக்கு இறவையில் 2 ஆயிரத்து 500 கிலோ முதல் மூவாயிரம் கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. ஒரு கிலோ மக்காச்சோளம் ரூ.6 முதல் 10 வரை விற்பனை செய்யலாம். அதன் மூலம் ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை லாபம் ஈட்ட முடியும். ஒவ்வொரு மண்ணின் தன்மைக்கு ஏற்ப பயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். எனவே இதுகுறித்த மேலும் சந்தேகங்களுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

<u>**நிலக்கடலை சாகுபடியாளர்களுக்கு வேளாண் துறை அறிவுரை**</u>



காஞ்சிபுரம்: நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள், விதை நிலக் கடலையைக் கட்டாயம் பரிசோதனை செய்த பிறகே நடவுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று காஞ்சிபுரம் மாவட்ட விதைப் பரிசோதனை நிலையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து விதைப் பரிசோதனை நிலைய மாவட்ட அலுவலர் பெருமாள் கூறிய தகவல்கள்: எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை ஓர் முக்கியப் பங்கு வகிக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கார்த்திகைப் பட்டத்தில் நிலக்கடலை பெருமளவு சாகுபடி செய்யப்படுகிறது. இந்தப் பட்டத்தில் சாகுபடி செய்யும்போது போதிய மழை, சரியான தட்பவெப்ப நிலை சாதகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது. நிலக்கடலை சாகுபடிக்கு நல்ல வடிகால் வசதியுடைய செம்மண், மணல் கலந்த வண்டல் மண் மிகவும் உகந்தது. கார்த்திகை பட்டத்துக்கு டிஎம்வி-13, விஆர்1-2, விஆர்1-3, டிஏஜி -2ஏ இவற்றில் ஏதாவது ஒரு ரகத்தைச் சாகுபடிக்கு தேர்வு செய்யலாம். நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே. நல்லத் தரமானச் சான்று பெற்ற விதையைத் தேர்வு செய்வது மிக அவசியம். நிலக்கடலையைப் பொருத்தவரை பயன்படுத்தப்படும் விதைகளுக்கு குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத் திறன் இருப்பது அவசியம். அவ்வாறு குறைந்தபட்சம் முளைப்புத் திறன் 70 சதவீதம் உள்ள விதைகளை 30 செ.மீ.க்கு 30 செ.மீ. என்ற இடைவெளியில் ஏக்கருக்கு 80 கிலோ காய்களைப் பயன்படுத்தி விதைப்பு செய்யும் போது ஏக்கருக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 333 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையைப் பராமரிப்பது எளிதாகும். எந்த ஒரு பயிருக்கும் அதன் பயிர் எண்ணிக்கை என்பது மகசூலைக் கணிக்கும் முக்கிய அம்சமாகும். அவ்வாறு தரமான விதைகளைப் பயன்படுத்தும்போது ஒவ்வொரு செடியிலும் சராசரியாக

40 காய்களுக்கு குறையாமல் கிடைக்கும். இதனால் ஏக்கருக்கு சராசரி மகசூலைவிட 30 சதவீதம் கூடுதல் மகசூல் பெறுவது உறுதி. எனவே மகசூலை அதிகப்படுத்துவதற்கு காரணியாக விளங்குவது விதையின் தரமே ஆகும். விதையின் தரத்தை அறியாமல் விதைப்பு மேற்கொள் வதால், விதைத்தப் பின் முளைப்புத் திறன் பாதிக்கப்பட்டு பயிர்களின் இடைவெளி அதிகமாகிறது. எனவே விவசாயிகள் தங்களது கையிருப்பில் உள்ள விதை நிலக்கடலைக் காய்களில் இருந்து 500 கிராம் அளவுக்கு விதை மாதிரி எடுத்து விதைப் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு ரூ. 30 பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி விதையின் தரத்தைத் தெரிந்து கொண்டு விதைப்புக்குத் தயாராகலாம் என்று மாவட்ட அலுவலர் பெருமாள் கூறியுள்ளார்.

## குமரி மாவட்ட அணைகளில் போதுமான நீர் இருப்பு கும்பப்பூ சாகுபடியில் பாதிப்பிருக்காது

கன்னியாகுமரி மாவட்ட அணைகளில் போதுமான அளவு நீர் இருப்பு உள்ளதால் கும்பப்பூ சாகுபடியில் பாதிப்பிருக்காது என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். நிகழாண்டு இம் மாவட்டத்தில் கடந்த நவம்பர் முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 43.97 அடியாகவும், 77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 74.77 அடியாக வும் உள்ளன. சிற்றாறு - 1 அணை நீர்மட்டம் 15.91 அடியாக வும், சிற்றாறு -2 அணை நீர்மட்டம் 16 அடியாகவும், மாம்பழத் துறையாறு அணை நீர்மட்டம் 54.12 அடியாகவும் உள்ளன. தொடர் மழையால், நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகிக்கும் முக்கடல் அணை கடந்த நவம்பரில் நிரம்பியது. மாம்பழத்துறையாறு அணையும் நிரம்பியுள்ளது. மாவட்டத்தில் இப்போது 8,500 ஹெக்டரில் நெல் நடவுப் பணி

முடிந்துள்ளதாகக் கூறும் விவசாயிகள், அணைகளிலுள்ள நீரை சிக்கனமாகவும் தேவைப்படும் பகுதிகளுக்கும் மட்டும் திறந்துவிட்டால் கும்பப்பூ சாகுபடியில் எந்த பாதிப்பும் இல்லாமல் அறுவடை செய்ய முடியும் என்றும், மாவட்டத்தில் பெரும்பாலும் பொன்மணி, டி.பி.எஸ். 3, டி.பி.எஸ். 5 நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். ஆரல்வாய்மொழி பகுதியில் கட்டப்பட்ட பொய்கை அணை 15.20 அடியை எட்டியுள்ளது. இதனால், அப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். வீணாகும் தண்ணீர்: இதனிடேயே, அணையிலிருந்து தண்ணீர் செல்லும் கால்வாய்களில் உள்ள ஷட்டர்களும், குளங்களில் உள்ள ஷட்டர்களும் பழுதாகியுள்ள தால் தண்ணீர் வீணாகிறது. இதுகுறித்து குறைதீர் கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தினாலும் இதுவரை நடவடிக்கை இல்லை என விவசாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். எனவே, கும்பப்பூ சாகுபடி நிறைவடைந்ததும் கோடைக்காலத்தில் அவசர அவசியம் கருதி, ஷட்டர்களை பழுதுநீக்க பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மாநில வேளாண் பல்கலை.களுடன் இணைந்து உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்: மத்திய அரசு மாநில வேளாண் பல்கலைக்கழங்களுடன் இணைந்து உணவு தானிய உற்பத்தி பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் திருச்சிராப்பள்ளி தொகுதி அதிமுக உறுப்பினர் பி. குமார் செவ்வாய்க் கிழமை எழுப்பிய கேள்விக்கு மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் மோகனாபாய் கல்யாண்ஜிபாய் குந்தாரியா அளித்த பதில் விவரம்: நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி 264.77 மில்லியன் டன்களாக இருந்தது. தற்போதை உணவு தானியத் தேவையை ஈடுசெய்யும் வகையில், "தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்', "ராஷ்டிரிய க்ருஷி விகாஸ் யோஜனா' உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் மூலம் உணவு தானிய உற்பத்தியைப்

பெருக்க விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பம், ஒட்டு ரக விதைகள், அதிக விளைச்சல் தரும் விதைகள், நீர்ப் பாசன சேமிப்புக் கருவிகள் உள்ளிட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில், மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் ஆகியவை இணைந்து பல்வேறு உணவு தானிய உற்பத்தி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஊட்டி ரோஜா பூங்காவில் இனி ஆண்டு முழுக்க மலர்களை ரசிக்கலாம்; தோட்டக்கலை துறை முயற்சி வெற்றி</u>**

ஊட்டி : ஊட்டியில், தோட்டக்கலை துறையின் புதிய முயற்சியால், ரோஜா பூங்காவில், ஆண்டு முழுக்க ரோஜா மலர்களை கண்டு ரசிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. நீலகிரி மாவட்டம் ஊட்டி ரோஜா பூங்காவில், 4,000 வகை ரோஜா செடிகளில் பூத்து குலுங்கும் மலர்கள், பார்வையாளர் களை குஷிப்படுத்துகின்றன.ஒவ்வொரு ஆண்டும், பிப்ரவரி மாதம், பூங்காவில் உள்ள ரோஜா செடிகள் கவாத்து செய்யப்படும். கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களில், அவை பூத்து குலுங்கும்; ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில், மலர்களின் இதழ்கள் உதிர்ந்து விடும். முதல் முயற்சிக்கு பலன் : இந்நிலையில், கடந்த மாதம், உலக ரோஜா சம்மேளன நிர்வாகிகள், ஊட்டி ரோஜா பூங்காவை பார்வையிட வந்ததை முன்னிட்டு, முதல் முறையாக, பூங்கா நிர்வாகம், ஆகஸ்ட் மாதமும், ரோஜா செடிகளை கவாத்து செய்தது. அதன் விளைவாக, தற்போது பூங்காவில் உள்ள ரோஜா செடிகளில், மலர்கள் பூத்து குலுங்குகின்றன. இதுகுறித்து, நீலகிரி தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி

கூறுகையில், "ஆகஸ்ட் மாதம் ரோஜா செடிகளை கவாத்து செய்ததன் விளைவாக, ரோஜா செடிகள் பூத்துள்ளன.இவை அடுத்த மூன்று மாதங்கள் வாடாமல் இருக்கும். அடுத்தாண்டு பிப்ரவரி மாதம், மீண்டும் செடிகள் கவாத்து செய்யப்பட்டு, கோடை சீசனுக்கு தயார்படுத்தப்படும். வரும் ஆண்டுகளில், ஆண்டுக்கு இரு முறை ரோஜா செடிகள் கவாத்து செய்யப்படும். அதன் மூலம், ஆண்டு முழுக்க ரோஜா பூங்காவுக்கு வரும் பார்வையாளர்கள், மலர்களை கண்டு ரசிக்க முடியும்," என்றார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், நாளை (19ம் தேதி), காலை 11:00 மணிக்கு, திருவள்ளூர் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## உதவி வேளாண் இயக்குனர் ஆய்வு

முருக்கேரி: திண்டிவனம் பகுதியில் விவசாயிகள் திருந்திய உளுந்து பயறு சாகுபடி செய்துள்ளதை வேளாண்மை உதவி இயக்குனர் ஆய்வு செய்தார். திண்டிவனம், மரக்காணம் பகுதியில் விவசாயிகள் திருந்திய உளுந்து பயறு சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். உளுந்து பயிர் செய்துள்ள பகுதிகளை வேளாண்மை உதவி இயக் குனர் கென்னடி ஜெபக்குமார் ஆய்வு செய்தார். பின், அவர் விடுத்துள்ள

செய்திக்குறிப்பு: தெற்கு ஆசிய நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான், மியான்மர் நாடுகளில் உளுந்து சாகுபடி அதிகளவு செய்கின்றனர். இந்தியா ஆண்டுக்கு 182 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. திண்டிவனம், மரக்காணம் பகுதியில் 9 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் உளுந்து பயிர் செய்துள்ளனர். இந்த மாத இறுதிக்குள் 5 ஆயிரம் ஏக்கர் உளுந்து பயிர் செய்யப்படும். வேளாண்துறை பரிந்துரை செய்யும் அனைத்து தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி பயிர் செய்தால் இரண்டு மடங்கு உற்பத்தி அதிகரிக்கும்.வேளாண்மை அலுவலர் எத்திராஜ், தொழில் நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர் சிவநேசன் உடனிருந் தனர்.

## வேளாண் அலுவலர் சங்க கூட்டம்

நாமக்கல் : தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்க, நாமக்கல் மாவட்ட மையம் சார்பில், உறுப்பினர் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் சேகர் தலைமை வகித்தார். சங்க உறுப்பினர்கள் தரப்பில் கூறப்பட்ட குறை மற்றும் கோரிக்கை குறித்து விவாதிக்கப் பட்டது. இது தொடர்பாக, மாவட்ட வேளாண் அலுவலரை சந்தித்து, முறையிடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.முன்னாள் மாவட்ட தலைவர் ஞானபிரகாசம், மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, துணைத் தலைவர் வீரமணி, இணை செயலாளர் செந்தில், நிர்வாகிகள் ராஜேந்திரன், மாவட்ட தணிக்கையாளர் குப்புசாமி, ஒன்றிய நிர்வாகிகள் கோவிந்தசாமி, அந்தோணிசாமி, ரத்தினவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நெல்லில் இலைசுருட்டு புழு தாக்குதல்; தடுப்பு முறைகளை கையாள அறிவுரை

நாமக்கல் : "நெல்லில், இலை சுருட்டு புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. அவற்றை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை கையாள வேண்டும்' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். கபிலர்மலை வட்டாரத்தில், சம்பா பட்டத்தில், 600 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, தூர் கட்டும் நிலையில் உள்ளது. பி.பி.டி., 5,204, ஐ.ஆர்.20, ஏடிடி-36 வெள்ளைப்பொன்னி ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.ஒரு மாதமாக, வானம் மப்பும் மந்தாரமாக இருந்த தால், நெல்லில் இலை சுருட்டு புழு தாக்குதல் ஆங்காங்கே தென்படு கிறது. இலை சுருட்டு புழுவானது, ஒரு அங்குலம் முதல், இரண்டு அங்குலம் வரை நீளம் கொண்டது. பார்ப்பதற்கு கண்ணாடி போல் பளபளப்பாக இருக்கும். இளம் புழுக்கள் நெல் இலையை நீளவாட்டில் சுருட்டி அதனுள் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். அதனால், நெல் இலையானது வெள்ளையாகி பேப்பர்போல் மாறிவிடும். நெல் இலையை பிரித்து பார்த்தால், அந்தப்புழுவானது வேகமாக நகர்ந்து கீழே குதித்துவிடும்.நெல்லின் வளர்ச்சி பருவத்தில், 100 இலைகளுக்கு, 10 இலைகளில் பாதிப்பு தென்பட்டால் நடவடிக்கை எடுத்து அழிக்க வேண்டும். தாய்ப்பூச்சியானது சிறிய பட்டாம்பூச்சி போல் இறக்கையால் அலையாய் கோடுகள் தென்படும். பூச்சி நடமாட்டம் தெரிந்து ஒரு வார காலத்தில் புழுக்களின் தாக்குதல் தென்படும். வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ கூறியதாவது: பயிருக்கு யூரியா (தழைச்சத்து) இடும்பொழுது தேவைக்கு அதிகமாக இடாமல், அவ்வப்போது, மூன்று முதல், நான்கு தடவை பிரித்து மேலுரமாக இடவேண்டும். அந்துப்பூச்சி களை கவர்ந்து அழிக்க, வயலில் விளக்குப்பொறி வைத்து தாய்ப்பூச்சி களை கவர்ந்து அழிக்கலாம்.நிம்பிசிடின் ஒரு லிட்டர் தண்ணீருடன், ஐந்து

மி.லி., கலந்து தெளிக்கலாம். புரபனோபாஸ், 50 இ.சி., இரண்டு மி.லி., ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். குளோரி பைரிபாஸ், 300 முதல், 500 மி.லி., ஹெக்டேருக்கு என்ற அளவில், 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம். பிப்ரோனில், ஐந்து எஃப்.எஸ்., 400 கிராம், ஹெக்டேர். மேற்கண்ட பருந்துகளில் ஏதாவது ஒன்றை தெளித்து, இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## டிச., 26 விவசாய குறைதீர் கூட்டம்

நாமக்கல் : "விவசாய குறைதீர் கூட்டம், வரும், 26ம் தேதி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வரும், 26ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் தலைமையில், விவசாய குறைதீர் கூட்டம் நடக்கிறது. விவசாயிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் மட்டும் பங்கேற்க வேண்டும்.அன்றைய கூட்டத்தில், விவசாயம் சார்ந்த நலத்திட்ட கோரிக்கை, குறைகள் குறித்து, எழுத்து பூர்வமாக மனுவாக கொடுத்து தீர்வு காணலாம். முன்னதாக, வரும், 23ம் தேதி, மாலை, 3.30 மணிக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில், நிலம் தொடர்பான மனுக்கள் மீது, உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கால்நடை சிகிச்சை முகாம்

ஓசூர்: சூளகிரி அருகே, மர்ம நோயால் ஆடுகள் இறப்பதாக, பொதுமக்கள் தெரிவித்ததை தொடர்ந்து, சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம் நடத்தப் பட்டது. சூளகிரி அருகே ஒட்டர்பாளையம் மற்றும் அணாசந்திரம் பகுதிகளில், மர்ம நோய் தாக்கி, 60க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள்

இறந்தது. மர்ம நோய் தாக்கி இறந்த கால்நடைகளை, கிணறுகளில் வீசி வந்த அப்பகுதி மக்கள், அரசு சார்பில், இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடத்த வேண்டும் என, கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, காமன்தொட்டி கால்நடை உதவி மருத்துவர் செல்வி, சூளகிரி கால்நடை உதவி மருத்துவர் ஜெயக்கொடி ஆகியோர் தலைமையில், சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. முகாமில், 532 கால்நடை களுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## ஊட்டி 'கிரீன் டீக்கு' உலகளவில் 'மவுசு'; உற்பத்தியை உயர்த்த கூட்டு சந்தை

குன்னூர் : நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும், 'கிரீன் டீ' க்கு, உலகளவில் அதிக கிராக்கி உள்ளதால், கூட்டுசந்தை வாயிலாக உற்பத்தியை அதிகரிக்க, திட்டமிடப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் தேயிலைக்கு, பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. இதனால் இங்குள்ள பல தேயிலை தொழிற்சாலைகளில், கிரீன் டீ உற்பத்தி செய்யப்படுகிறது.நீலகிரியின் கிரீன் டீக்கு, உலகளவில் அதிக கிராக்கி உள்ளதாலும், கலப்படம் செய்ய முடியாது என்பதாலும், இதன் உற்பத்தியை அதிகரிக்க, தேயிலை வாரியம் அறிவுறுத்தி வருகிறது. இதற்கான முயற்சியில், பல்வேறு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நீலகிரி மாவட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் சங்கத்தின் நிறுவன தலைவர் சிவன் கூறியதாவது: தேசிய அளவில் ஒரு கோடி கிலோ கிரீன் டீ உற்பத்தி செய்யப்படுகிறது. நீலகிரியில் ஓராண்டில் சுமார், 25 லட்சம் கிலோ தயாரிக்கப்பட்டுள்ளது. 'கிரீன் டீயை குடிப்பது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது' என, டாக்டர்கள் அறிவுறுத்தி வருவதால், வெளிநாடுகளில் இத்தேயிலைக்கு அதிக கிராக்கி உள்ளது.இதனால், சிறு மற்றும் குறு தேயிலை தொழிற்சாலைகளை உருவாக்க, தேயிலை வாரியம், 40 சதவீதம் மானியம் அளிக்கிறது. சிறு விவசாயிகள், வீட்டிலே

யே சொந்தமாக தேயிலை துாளை தயாரித்தால், அதிக வருமானம் கிடைக்கும். இதற்காக, கூட்டு சந்தை மூலம், கிரீன் டீ உற்பத்தியை அதிகரிக்க எங்கள் சங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது. புதிய முயற்சிக்கு சிறு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்.இவ்வாறு, சிவன் கூறினார்.

**<u>தஞ்சை, வேதையில் அடை மழை</u>**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று மதியம் வரை, இடைவிடாது சாரல் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் நேற்று ஒரே நாளில், 360 மி.மீ., மழை பெய்துள்ளது. வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, கடலோர மாவட்டங்களில் கடந்த, இரண்டு நாட்களாக சாரல் மழையும் அவ்வப்போது பலத்த மழையும் பெய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் நள்ளிரவு துவங்கிய சாரல் மழை நேற்று மதியம் வரை, தொடர்ந்து பெய்தது. மாவட்டம் முழுவதும் நேற்று ஒரே நாளில், 360 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கும்பகோணம் சுற்றுவட்டாரப் பகுதிகளில், 48 மி.மீ., மழை பதிவாகி யுள்ளது. தஞ்சையில், நேற்று காலை விடாது பெய்த அடை மழையால், மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தவாறு பள்ளிக்கு சென்றதை காண முடிந்தது. வேதாரண்யம் வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று காலையிலிருந்து வேதாரண்யம், கோடியக்கரை, வாய்மேடு, தகட்டூர் தலைஞாயிறு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில், மழை பெய்து வருகிறது. வேதாரண்யத்தில், நேற்று மாலை, 6 மணி வரை, 24 மி.மீ., மழையும், தலைஞாயிறில், 9 மி.மீ., மழையும் பதிவாகி இருந்தது மழை, கடல் சீற்றம் காரணமாக, வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறை புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் போன்ற கடலோர கிராம மீனவர்கள், கடலுக்கு

செல்லவில்லை. 600க்கும் மேற்பட்ட படகுகளை பாதுகாப்பாக கரையில் நிறுத்தி உள்ளனர்.

## பருத்தி விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பு! 25 ஆண்டுகளுக்கு பிறகு சாகுபடி செய்வதில் ஆர்வம்

தேனி : தேனி மாவட்டத்தில் 25 ஆண்டுகளுக்கு பிறகு பருத்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டும் விவசாயிகள் தரமான பருத்தி ரகங்களின் விதைகள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். தேனி மாவட்டம் பருத்தி சாகுபடியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்று இருந்தது. தேனியில் மட்டும் ஜின்னிங் மில்கள், ஸ்பின்னிங் மில்கள், பருத்தி ஆயில் மில்கள் நூற்றுக்கணக்கில் இருந்தன. இவற்றில் 25 ஆயிரம் பேர் வேலை செய்தனர். தேனி பருத்தி மார்க்கெட் மாநில அளவில் இரண்டாவது பெரிய மார்க்கெட்டாக இடம் பிடித்தது. மழை குறைவு, பருத்தியில் நோய் தாக்குதல், விளைச்சல் சரிவு, விலை வீழ்ச்சி போன்ற காரணங்களால் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி குறைந்தது. விவசாயிகள் கரும்பு, மக்காச் சோள சாகுபடிக்கு மாறினர். இதனால் பருத்தியை நம்பியிருந்த தொழிற் சாலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலை இழந்தனர். மாநில அளவில் புகழ்பெற்ற தேனி பருத்தி மார்க்கெட் மூடப்பட்டது.25 ஆண்டுகளுக்கு பிறகு பருத்திக்கு மறுவாழ்வு காலம் தொடங்கி உள்ளது. பருத்திக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. நோய் தாக்குதல் இல்லாத சாகுபடி முறைகள், நவீன பாசன முறைகள் கண்டறியப்பட்டுள்ளன. புது ரக விதைகளால் விளைச்சலும் அதிகரிக்கிறது.எனவே விவசாயிகள் மீண்டும் பருத்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே பருத்தி சாகுபடி பரப்பு அதிகரிக்க தொடங்கி உள்ளது. தரமான பருத்தி விதைகளை விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால் விவசாய விரிவாக்க மையங்களிலும் வெளிமார்க்கெட்டிலும் இந்த ரக விதைகள் கிடைப்ப தில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் மார்க்கெட்டில் வீரிய ரக விதைகள் எனக்கூறி பலரும் விதை விற்பனை செய்கின்றனர். இவர்

களுக்கு தேவையான விதைகளை வழங்க விவசாயத்துறை முன்வந்து பருத்திசாகுபடியை ஊக்குவிக்கவேண்டும். இதன் மூலம் விவசாயிகள் பயன்பெறுவதோடு தொழிலாளர்களுக்கும் வேலை அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

## குமரியில்தொடரும்சாரல்மழை

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த மாதம் முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. கடந்த வாரம் சில நாட்கள் வெயில் கொளுத்திய நிலையில் மீண்டும் சாரல் மழை பெய்ய தொடங்கியுள்ளது. நேற்று வானம் எப்போதும் மேகமூட்டமாக காணப்பட்டது. அடிக்கடி சாரல் மழை பெய்தது. காலையில் பெய்த சாரல் மழையால் பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் சிரமப்பட்டனர். அதிக பட்சமாக சிற்றாறு-1 அணையில் 11.4 மி.மீ. மழை பெய்தது. பேச்சிப்பாறை அணை நீர் பிடிப்பு பகுதிகளிலும் சாரல் மழை பெய்தது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 43.97 அடியாக இருந்தது. அணைக்கு 50 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் 550 கனஅடி தண்ணீர் வெளியேற்றப் பட்டது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 74,77 அடியாக உள்ளது. நாகர்கோவிலில் 6மிமீ மழை பதிவானது.

## ஸ்ரீவி.,யில் குறைவான மழை; விவசாய பரப்பு அதிகரிப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் குறைவாக மழை பெய்த போதிலும் தொடர் மழையை நம்பி விவசாயிகள் அதிக பரப்பில் விவசாயம் செய்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூரில் 100 கண்மாய்கள் உள்ளன. கண்மாய்நீரை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாது கண்மாய்கள் வறண்டு நிலத்தடிநீர் மட்டம் குறைந்தது. விவசாயம் செய்யும் பரப்பும் குறைந்தது .பொதுவாக நவம்பரில் 754 மி.மீ., மழை பெய்யும். இந்தாண்டில் நவம்பர் வரை 673 மி.மீ.,மழை தான் பெய்தது. சராசரியை விட 81 மி.மீ., மழை குறைவாக பெய்துள்ளது. 20 கண்மாய்களில் மட்டுமே தண்ணீர் உள்ளது.

அந்த நீரை கொண்டு ஒரு மாதம் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். கடந்த சில ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியாத விவசாயிகள் இந்தாண்டு 4 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான பரப்பில் விவசாயம் செய்ய துவங்கி விட்டனர். நெல், சிறு தானியங்கள், பயறு, பருத்தி, கரும்பு, மக்கா சோளம், கம்பு, குதிரைவாளி, சோளம், என விவசாயம் செய்துள்ளனர். பயிர்களை விளைச்சல் செய்ய போதுமான தண்ணீர் இல்லாத போதிலும் மழை பெய்யும் நம்பிக்கையில் விவசாயம் செய்து வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சாதா ரக நெல் ரூ.1,410க்கும் சன்னரக நெல் ரூ.1,470க்கும் கொள்முதல் செய்ய நடவடிக்கை



சென்னை: சாதா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410 என்றும், சன்னரக நெல் ரூ.1470 என்ற விலையிலும், விவசாயிகளிடமிருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் என்று அமைச்சர் அறிவித்துள்ளார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்களுடனான மாநில அளவிலான கலந்தாய்வு கூட்டம் உணவுத்துறை அமைச்சர் காமராஜ் தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்றது. நடப்பு காரீப் கொள்முதல் பருவம் 2014-15ல் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசியதாவது: சம்பா பருவ நெல் அறுவடை வரும் ஜனவரி முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்குகள் தவிர, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன

கிடங்குகள், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவன கிடங்குகள் ஆகியவற்றை தேவைக்கேற்ப உபயோகப்படுத்தி கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதவிர, போக்குவரத்து ஒப்பந்தகாரர்களுடனான கூட்டம் நடத்தி உள்மண்டல இயக்கம் மற்றும் வெளிமண்டலங்களுக்கு சாலை மூலமாகவும், சரக்கு ரயில் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படும் நெல்லை உடனுக்குடன் இயக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நவீன அரிசி ஆலைகள் மற்றும் அரவை முகவர்களுக்கு நெல்லை ஒதுக்கீடு செய்ய தலைமை அலுவலக உத்தரவு பெற்று மண்டல மேலாளர்கள் நடவடிக்கையெடுத்து, கொள்முதல் நிலையங்களில் அன்றாடம் கொள்முதல் செய்யப்படும் நெல்லை ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த கொள்முதல் பருவத்தில் குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண ரக நெல்லுக்கு ரூ.1360 என்றும், சன்ன ரக நெல்லுக்கு ரூ.1400 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு, ஊக்கத்தொகையாக சாதா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50ம், சன்னரக நெல்லுக்கு ரூ.70ம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. இதன்படி சாதா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410 என்றும், சன்னரக நெல் ரூ.1470 என்ற விலையிலும், விவசாயிகளிடமிருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும். 1.10.2014 முதல் 30.9.2015 வரை கொள்முதல் செய்யப்படும் அனைத்து ரக நெல்லுக்கும் இந்த கொள்முதல் விலை பொருந்தும். இதுவரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4,700 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் காமராஜ் பேசினார்.

**<u>போச்சம்பள்ளியில் இன்று ஏலத்தின் மூலம் பருத்தி விற்பனை</u>**

போச்சம்பள்ளி, :கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் தூயமணி விடுத்துள்ள அறி க்கை: போச்சம்பள்ளியில் செயல்பட்டு வரும் கிருஷ்ண கிரி வட்ட வேளா ண்மை உற்பத்திளார்கள் கூட்டுறவு சங்கம் தலைமை அலுவலகத்தில் இன்று(17ம்

தேதி) முதல் பருத்தி ஏலம் துவங்கு கிறது. வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெறும். எனவே, விவசாயிகள் தங்களது நிலத்தில் சாகுபடி செய்த பருத்திகளை போச்சம்பள்ளி கூட்டுறவு விற்ப னை சங்கத்திற்கு கொண்டு வந்து பயன்பெறலாம். மேலும், விவசாயிகளுக்கு தேவையான தரமான உரம் அரசு நிர்ணயம் செய்த குறைந்த விலைக்கு விற் பனை செய்யப் படுகிறது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5.5 டன் தேங்காய் பருப்பு ரூ4 லட்சத்திற்கு விற்பனை

ஜலகண்டாபுரம், : சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணா புரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏலத்தில் காங்கேயம், ஊத்துக்குளி, பெருந்துறை, திருப்பூர், திருச்செங்கோடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொள்வார்கள். இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 101 மூட்டைகளில் 5,500 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். கடந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ70க்கும், அதிகபட்சமாக ரூ83.80க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ75க்கும், அதிகபட்சமாக ரூ81.80க்கும் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம் ரூ4 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது.

## பயிர்கள் விளைச்சல் பெற டிஏபி கரைசல் வேளாண் அதிகாரிகள் ஆலோசனை

பழநி, : பயிறு வகை களில் அதிக விளைச்சல் பெற்றிட டிஏபி கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள் ளனர். பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயிறு

வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரியாக பயிரிடப் பட்டுள்ள பயிறு வகைகளில் நல்ல தரமான மணிகளை பெற வேளாண் அதிகாரிகள் கூறியதாவது, தரமான பயிர்களை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டிஏபி கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டிஏபி உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறையும் மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத்தெளிப்பான் மூலமாக 200 லிட் டரில் கலந்து தெளிக்க வேண் டும். அதன் மூலமாக அதிகப்படியான பூக்களும், திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெற லாம். தற்சமயம் டிஏபி கரை சல் விரிவாக்க மையத்தில் மான் ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய மானிய விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள் ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>நிலக்கோட்டை பகுதியில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு</u>

நிலக்கோட்டை, : நிலக்கோட்டை சுற்றுவட் டார பகுதியில் உள்ள நிலங்களில் மண்புழு உரமிட்டு பயிரிடப்பட்டுள்ள குதிரை வாலி உள்ளிட்ட பயிர்களை அதிகாரிகள் ஆய்வு செய் தனர். நடப்பாண்டில் நல்ல மழை பெய்துள்ளதை தொடர்ந்து நிலக்கோட் டை சுற்றுவட்டார பகுதிகளான எத்திலோடு, விளா ம்பட்டி, பள்ளபட்டி, பிள்ளையார்நத்தம் உட்பட பல்வேறு கிராமங்களில் நெல், குதிரை வாலி, வெள்ளைசோளம் போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இந்நிலையில், மண்புழு உரமிட்டால் பயிர்களின் மகசூல் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு தெரிவித்திருந்தனர். இதையடுத்து, விவசாயிகள் மண்புழு உரங்களை

பயிர்களுக்கு இட்டனர். இவ்வாறு மண்புழு இடப் பட்டு விளைந்த பயிர்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார், வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பையா, வேளாண்மை அலுவலர் சங்கரபாண்டியன் ஆகி யோர் ஆய்வு செய்தனர். அப்போது, மண்புழு உரமிட்ட பயிர்கள் செழிப் பாக வளர்ந்துள்ளதை பார்வையிட்ட வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளை பாராட்டினர்.

## பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை

சிவகங்கை, : மிளகாய், பப்பாளி காய்கறி பயிரில் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து சிவகங்கை தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் பாலமுருகன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- பப்பாளியில் நீர் தேங்குவதால் வரக்கூடிய தண்டு அழுகல் நோய்க்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1லி நீருக்கு 2கிராம் அல்லது 1சதவீதம் போர்டியாக்ஸ் கலவையை தூரில் ஊற்ற வேண்டும். மிளகாய் பயிரில் இலைப்பேன் தாக்குதலுக்கு 1லி நீரில் 1மி.லி டைமித்தேயட் அல்லது மீதைல் டெமட்டான் கலந்து தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோய்க்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1லி நீருக்கு 2.5மி.லி அல்லது கார்பண்டாசிம், மேங்கோசெப் 2கிராம் அளவில் கலந்து தெளிக்க வேண்டும். சாம்பல் நோய்க்கு 1லி நீரில் 3கிராம் அளவில் நனையும் கந்தகத்தை கலந்து தெளிக்க வேண்டும். வெண்டை மற்றும் கத்தரியை தாக்ககூடிய காய்துளைப்பானுக்கு 1லி நீரில் 2கிராம் அளவு கார்பரில் மருந்தை தெளிக்கவும். நாற்று அழுகல் நோய்க்கு காப்பர் ஆசிஜிகுளோரைடு 1லி நீரில் 2கிராம் மருந்தை கலந்து தெளிக்கவும். சாம்பல் நோய்க்கு 1லி நீரில் 3கிராம் அளவில் நனையும் கந்தகத்தை கலந்து தெளிக்கலாம்.

## தென்மண்டல வேளாண் ஆராய்ச்சி கூட்டம்

திருச்சுழி, : அருப்புக்கோட்டை மண்டல ஆராய் ச்சி நிலையத்தில், தென் மண்டல வேளாண் ஆராய் ச்சி மற்றும் விரிவாக்க ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண் துறை உயர் அலுவலர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயர் அலுவலர்கள், விவசாயி கள் கலந்து கொண்டனர். விவசாயிகள் விஞ்ஞானிகளுடன் கலந்து கொண்டு இதர துறை சார்ந்த தொழில் நுட்ப பயன்பாடு மற்றும் பிரச்னைகள் குறித்து விவாதித்தனர். இதனை தொடர்ந்து அனைவரையும் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் பால் பாண்டி வரவேற்று பேசி னார். இந்த ஆலோசனைக் குழு கூட்டம் குழுவின் துணைத் தலைவர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலை கழக ஆராய்ச்சி இயக்குநர் மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மேலும் இக்கூட்ட த்தில் தமிழ்நாடு வேளாண் மை பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் பொன்னுச்சாமி, பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை இயக்குநர் அனந்தகுமார், பயிர் பாதுகாப்புத் துறை இயக்குநர் ராமராஜு, விருதுநகர் மாவட்ட இணை வேளாண்மை இய க்குநர் சுப்பையா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்த சிறப்பான கூட்ட த்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மண்டல ஆராய்ச்சி நிலைய உழவி யல் துறை பேராசிரியர் செந்திவேல் நன்றி கூறினார்.

## நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஆலோசனை

திருச்சுழி, : விருதுநகர் மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு வேளாண்துறை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். விருதுநகர் மாவட்டத்தில், கார்த்திகை, மார்கழி

மாதங்களில் விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி செய்வர். நிலக்கடலை விவசாயிகளுக்கு உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் செண்பகராஜ் கூறியது: விவசாயிகள் ஏக்கருக்கு 50 கிலோ விதையினை சூடோமோனாஸ் (10 கி/கி) கொண்டு விதை நேர்த்தி செய்யவும். நேர்த்தி செய்த விதையினை சரியான பயிர் இடைவெளி விட்டு, செடிகளின் வரிசைகளுக்கிடையே 30 செ.மீட்டரும், செடிகளுக் கிடையே 10 செ.மீட்டரும் இருக்குமாறு விதைக்கவும். மண் பரிசோதனைப் படி உரமிடவும் அல்லது மானா வாரி பயிருக்கு ஏக்கருக்கு 4:4:18 என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை தரக்கூடிய உரங்களையும், இறவைப்பயிருக்கு 7:14:20 என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்களைத் தரக்கூடிய உரங்களை இட வேண்டும். மேலும், ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டச்சத்தி னை இடவும். 4 பாக்கெட் ரைசோபியம் மற்றும் 4 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவினை கடைசி உழவின் போது இடலாம். ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தினை கடைசி உழவின் போது 80 கிலோவும், 45ம் நாள் 80 கிலோ ஜிப்சத்தை களை எடுப்பின் போது இட்டு மண் அணைப்பதால் கடலையில் பருப்புகள் பொக்கில்லாமலும் திரட்சியாகவும் உருவாகும். மேற்கண்ட தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலா மென அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>19ம்தேதி விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்</u>

திருவள்ளூர், : கலெக்டர் வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள அறிக்கை: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவு துறை, பொதுப்பணி துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வள துறை, கால்நடை பராமரிப்பு துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண்

சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, விவசாயிகள் தவறாது கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>‘தினத்தந்தி’ செய்தி எதிரொலி : அரியலூர் மாவட்ட ஏரிகளுக்கான நீர்வரத்து வாய்க்கால்களை தூர்வாரும் பணி கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்தார்</u>**



‘தினத்தந்தி’ செய்தி எதிரொலியால் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கான நீர்வரத்து வாய்க்கால்களை தூர்வாரும் பணி தொடங்கி யது. இந்த பணியை கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்தார். ‘தினத்தந்தி’யில் படத்துடன் செய்தி அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் 69 ஏரிகளும், ஆற்று பாதுகாப்பு கோட்ட பராமரிப்பில் 23 ஏரிகளும் மாவட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களில் சுமார் 500–க்கும் மேற்பட்ட ஏரிகள், குளங்கள், குட்டைகளும் உள்ளன. இவைகள் அனைத்தும் இந்த மாவட்ட பொதுமக்கள், விவசாயிகளுக்கு நீர் ஆதாரமாக திகழ்ந்து வருகின்றன. இந்த ஏரிகளையும், நீர் வரும் வாய்க்கால்களையும் தூர்வார வேண்டும் என்று கடந்த மாதம் ‘தினத்தந்தி’யில் படத்துடன் செய்தி வெளியானது. இதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் ஆலோசனைகூட்டங்கள்நடந்தன.

தூர்வாரும்பணிகள்தொடக்கம்

இதில் முதல் கட்டமாக அரியலூர் நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான செட்டி ஏரிக்கு நீர் வரும் சுமார் 4 கிலோ மீட்டர் நீளமுள்ள

வாய்க்காலை தூர் வாரும் பணி நேற்று தொடங்கியது. அரியலூர் அருகில் உள்ள செட்டி ஏரி, அரச நிலையத்தான் ஏரி, குறிஞ்சான் குளம் ஏரி ஆகிய ஏரிகளின் வரத்து வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் சுமார் ரூ.4 லட்சம் மதிப்பில் நேற்று குறும்பன் சாவடியில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பணிகளை கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:– அரியலூர் நகரத்தில் மூன்று ஏரிகளின் வரத்து வாய்க்கால் களை தூர்வாரும் பணிகள் இன்று தொடங்கப் பட்டுள்ளது. 4 கிலோ மீட்டர் அளவிற்கு இப்பணிகள் நடைபெறவுள்ளது. இப் பணிகள் 6 சிமெண்டு நிறுவனங்கள் சார்பில் மேற்கொள்ளப் படுகிறது. இப்பணிகள் நிறைவேற்றப்பட்டால் ஏரிகளில் நீர்வரத்தினை அதிகப்படுத்துவதற்கு பயனுள்ளதாக அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

உதவிகலெக்டர்

இந்த நிகழ்ச்சியில் உதவி கலெக்டர் சந்திரசேகர சகாமூரி, தாசில்தார் வைத்தியநாதன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சாந்தி(நீர்வள ஆதாரம்), சிமெண்டு உற்பத்தி நிறுவனங்களின் அலுவலர்கள் ரவிச்சந்திரன், முருகானந்தம், கமலக்கண்ணன், ஜாகீர், அழகர்சாமி, ராமநாதன், பாலசுப்பிரமணியன், சார்லஸ் ஆல்வின், வாசுதேவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>தோட்டக்கலைத்துறை சார்பில் பயனாளிகளுக்கு ரூ.3¼ லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வழங்கினார்</u>



அரியலூர் மாவட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் 179 பயனாளிகளுக்கு ரூ.3 லட்சத்து 29 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப

விநாயகமூர்த்திவழங்கினார்.

நலத்திட்டஉதவிகள்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வேளாண் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறையின் சார்பில் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு மானியமாக ரூ.1,500 வீதம் 86 விவசாயிகளுக்கு 84.6 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.1 லட்சத்து 29 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2014–2015 வீரிய ரக காய்கறி சாகுபாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு 50 சதவீத மானியத்தில் ரூ.2 லட்சம் மதிப்பில் 93 விவசாயிகளுக்கு வெண்டை, கத்தரி, பாகல் மற்றும் மிளகாய் ஆகிய விதைகளையும் ஆக மொத்தம் ரூ.3 லட்சத்து 29 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சடையப்பவிநாயகமூர்த்திவழங்கினார்.

அதிகாரிகள்

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை இணை இயக்குனர் குணசேகரன், தோட்டக் கலைத் துறை துணை இயக்குனர் சுப்பையா, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள்(பொறுப்பு) சரண்யா, சிவக்குமார், வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## <u>டெல்டா பகுதியில் பலத்த மழை அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 155 மில்லி மீட்டர் பதிவு</u>

கடலூர், கடலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதியில் பலத்த மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 155 மில்லி மீட்டர் பதிவாகியுள்ளது.

<u>கன மழை</u>

வங்கக்கடலில் அந்தமான் அருகே நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலூர் மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் அந்தமான் அருகே நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தற்போது தென்மேற்கு பகுதியில் நிலைகொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.
அதன்படி நேற்று முன்தினம் மாலையில் இருந்தே மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் நள்ளிரவில் பலத்த மழை பெய்தது. இந்த மழை நேற்று காலை வரை நீடித்தது.

வாகன ஓட்டிகள் அவதி

பிறகு காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த மழை சுமார் 30 நிமிடம் கொட்டி தீர்த்தது. பின்னர் 9.30 மணிக்கு தொடங்கிய மழை விடாமல் மாலை வரை கன மழையாக பெய்து கொண்டே இருந்தது. அவ்வப்போது மிதமாகவும், சில நேரங்களில் கன மழையாகவும் பெய்தது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்கு மாணவ– மாணவிகள் மழையில் நனைந்தபடி மிகுந்த சிரமத்துடன் சென்றனர். சிலர் குடை பிடித்தபடியும், மழை கோட்டு அணிந்தபடியும் சென்றதை காண முடிந்தது. இந்த மழையினால் வாகன ஓட்டிகள் கடுமையான அவதி அடைந்தனர்.

சிதம்பரம்

இதேபோல் டெல்டா பகுதியான சிதம்பரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், அண்ணாமலைநகர் உள்பட பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு 1 மணிக்கு தொடங்கிய கன மழை நேற்று அதிகாலை வரை நீடித்தது. பின்னர் அவ்வப்போது லேசாகவும், கனத்த மழையாகவும் பெய்தது. இந்த கன மழையால் சிதம்பரம் மேல புதுத்தெரு, இந்திராநகர், அப்பாவு சந்து, கனகசபை நகர், அண்ணாமலைநகர் மற்றும் சிதம்பரம் நான் முனிசிபல் பகுதியில் உள்ள தாழ்வான குடியிருப்பு

பகுதிகளை மழைநீர் சூழ்ந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப் பட்டனர்.

பக்தர்கள் அவதி

சிதம்பரம் நடராஜர் கோவில் கீழ சன்னதியில் மழைநீர் குட்டைபோல் தேங்கி நின்றது. இதனால் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் அவதிப் பட்டனர். வடக்கு வீதியில் மழைநீர் தேங்கி நின்றதாலும், பாதாள சாக்கடைக்காக தோண்டப்பட்ட பள்ளத்தாலும் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன.

வடக்கு வீதி வளைவில் சாலையோரம் உள்ள மழைநீர் வடிகால் பள்ளத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதை அறியாமல் பலர் அதன் உள்ளே தவறி விழுந்து எழுந்து சென்றதை காண முடிந்தது. இதை மூடவோ அல்லது பள்ளம் இருப்பதை எச்சரிக்கும் வகையில் தகுந்த நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் எடுக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பரங்கிப்பேட்டை

பரங்கிப்பேட்டையில் நேற்று அதிகாலை 4 மணி முதல் கன மழை பெய்தது. இந்த மழையால் தாழ்வான பகுதியான சின்னகடை தெரு, செட்டி கடை தெரு, கீரைக்காரன் தெரு போன்ற தெருக்களில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. பரங்கிப்பேட்டை முத்துக்குமாரசாமி கோவில் வளாகத்தில் மழைநீர் குளம்போல் தேங்கியது. இதனால் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய மிகவும் சிரமப்பட்டனர். மழை நீரை உடனுக்குடன் வெளியேற்ற வடிகால் வசதி செய்ய பக்தர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இதேபோல் சேத்தியாத்தோப்பு, காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், பண்ருட்டி, புவனகிரி, லால்பேட்டை, வானமாதேவி, காட்டுமயிலூர் உள்பட பல்வேறு பகுதியிலும் அதிகாலை முதல் மதியம் வரை பலத்த மழை பெய்தது.

மழை அளவு

இருப்பினும் மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 155 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. குறைந்த பட்சமாக தொழுதூரில் 5 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 27.76 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மாவட்டத்தின் பிற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:–

சிதம்பரம் – 69

அண்ணாமலைநகர் – 44.20

காட்டுமன்னார்கோவில் – 42

புவனகிரி – 28

கொத்தவாச்சேரி – 27

வானமாதேவி – 25.60

கடலூர் – 24.70

வேப்பூர் – 22

லால்பேட்டை – 20

மே.மாத்தூர் – 19

பண்ருட்டி – 19

காட்டுமயிலூர் – 17

சேத்தியாத்தோப்பு – 16.20

ஸ்ரீமுஷ்ணம் – 14

லக்கூர் – 9

விருத்தாசலம் – 7.40

கீழ்செறுவாய் – 7

பெலாந்துறை – 6

குப்பநத்தம் – 5.80

**காஞ்சீபுரம் மாவட்டத்தில் வேளாண் எந்திரங்கள் வாங்க 50 சதவீதம் மானியம் கலெக்டர் தகவல்**



காஞ்சீபுரம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் வேளாண் எந்திரங்கள் வாங்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று கலெக்டர் வி.கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

50 சதவீத மானியம்

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே. சண்முகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:–

வேளாண்மையில் எந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கவும், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஈடு செய்யவும், பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும் முடியும்.

அதன்படி விவசாயிகளுக்கு உழவு எந்திரம், கதிர் அறுக்கும் எந்திரம், பண்ணைக்கருவி வாங்குவதற்கு 50 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூ.4 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மின்சார சேமிப்பு

நில மேம்பாட்டுத்திட்டம், சிறுபாசன திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டம், சூரிய மின் இறைப்பான்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகவல், கல்வி பரிமாற்ற பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2–ம் பசுமை புரட்சியை ஊக்குவிக்கும் வகையிலும், மின்சார சேமிப்பை அதிகரிக்கும் வகையிலும் காஞ்சீபுரம் மாவட்டத்தில் 80 சதவீத மானியத்தில் விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2014–15ம்

ஆண்டில் 70 சூரிய இறைப்பான்கள் நிறுவ திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>கால்நடை மருத்துவ முகாம்</u>



சோழிங்கநல்லூர், தமிழக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் திருப்போரூர் ஒன்றியம் தாழம்பூர் ஊராட்சியில் நத்தம் பகுதியில் கால்நடை மருத்துவமுகாம் நடைபெற்றது. இந்த முகாமிற்கு தாழம்பூர் ஊராட்சிமன்ற தலைவர் டி.தேவசித்தம் தலைமை தாங்கினார். மாம்பாக்கம் கால்நடை உதவி மருத்துவர் மைதிலி கலந்து கொண்டு ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பு ஊசி, கோழிகளுக்கு வெள்ளைக்கழிவு தடுப்பு ஊசி, மலட்டுத்தன்மை, குடற்புழு நீக்குதல் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் சிறந்த கிடா கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## <u>செட்டிகுளத்தில் ரூ.7¾ லட்சத்திற்கு சின்ன வெங்காயம் ஏலம்</u>



பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் திறந்தமுறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் செங்காட்டுப்பட்டி, லாடபுரம், நக்கசேலம், மங்கூன், செட்டிகுளம், நாட்டார்மங்கலம், சிறுவயலூர், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச்சூர், மாவலிங்கை, அம்மாபாளையம், ஆகிய கிராமங்களை சேர்ந்த 127 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு

வந்து விற்பனை செய்தனர். திண்டுக்கல், திருச்சி, அரியலூர், செட்டிகுளம், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர், புதூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 18 வியாபாரிகள் 519 மூட்டை அளவுள்ள 40 ஆயிரத்து 9 கிலோ வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். சின்ன வெங்காயம் அதிகபட்சம் கிலோ ரூ.42–க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.20–க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.7 லட்சத்து 65 ஆயிரத்து 729–க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடைபெற்று வருகிறது.

## புதுக்கோட்டையில் விடிய, விடிய பலத்த மழை திருமயத்தில் அதிகபட்சமாக 14.40 மில்லி மீட்டர் பதிவானது



புதுக்கோட்டையில் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. திரு மயத்தில் அதிகபட்சமாக14.40மில்லிமீட்டர்பதிவானது.

விடியவிடியமழை

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. புதுக்கோட்டை யில் நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று காலை வரை பலத்த மழை பெய்தது. இதனால் சாலை களில் மழைநீர் வெள்ளம் போல தேங்கியது. ஒரு சில தாழ்வான பகுதிகளில் மழைநீர் புகுந்தது. புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பெய்த பலத்த மழை காரண மாக பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள துணை மின் நிலையம், கீழராஜவீதி, மேல ராஜவீதி, தபால் நிலையம், புதிய பேருந்து நிலையம், ஆகிய பகுதி சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் சாலைகளில் வாகனங்களில் செல்வோர் கடும் அவதி

அடைந்தனர்.

மழையளவு

புதுக்கோட்டை மாவட்டத் தில் நேற்று முன்தினம் முதல் நேற்று காலை வரை பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:- ஆலங்குடி-14.30 (மி.மீ), கீரனூர்-6, புதுக்கோட்டை-5, அரிமளம்-12.20, திரு மயம்-14.40, கறம்பக்குடி-7, மழையூர்-2, பெருங்களூர்-2, இலுப்பூர்-2.40, உடையாளிப் பட்டி-2, மணமேல்குடி-1, அன்ன வாசல்-4, பொன்ன மராவதி-12.20, காரையூர்-3. மாவட்டம் முழுவதும் மொத்தம் 87.50 மில்லி மீட்டர் மழை பெய்திருந்தது.

தி இந்து
தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

<u>தினசரி வருமானம் தரும் ஸ்பைருலினா சுருள்பாசி</u>



உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான புரதச் சத்தை மிகுதியாகக் கொண்டுள்ள ஸ்பைருலினா சுருள்பாசியைக் குறைந்த செலவில் வளர்த்து, அதிக வருமானத்தைப் பெறலாம். புரதச் சத்து மிகுந்த ஸ்பைருலினாவில் 15 வகைகள் உள்ளன. தமிழகச் சூழலுக்கு ஏற்றவை ஸ்பைருலினா மேக்ஸிமா, ஸ்பைருலினா பிளான்டெனிஸ். இயந்திரங் களைக் கொண்டு பெரு நிறுவனங்கள் மூலம் வளர்ப்பதற்கு மேக்ஸிமா வகை ஏற்றது. சிறு தொழில் மூலம் வளர்ப்பதற்கு பிளான்டெனிஸ் வகை உகந்தது.

**ஊட்டம் அதிகம்**

ஸ்பைருலினாவை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பிரதான உணவாக எடுத்துக்கொள்வது குறிப்பிடத்தக்கது. பாசியை உற்பத்தி செய்து பல வழிகளில் விற்பனை செய்யலாம். கால்நடைகளுக்குத் தீவனமாகக்

கொடுப்பதன் மூலம் அதிக வருமானத்தை ஈட்ட முடியும். இதை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாகவும் மாற்றலாம், தாய்ப்பாசியாகவும் விற்கலாம்.
ஸ்பைருலினாவால் மட்டுமே சத்துக் குறைபாட்டை முழுமையாக ஒழிக்க முடியும் என ஐ.நா. சபை கருத்து தெரிவித்துள்ளதால். எதிர்காலத்தில் ஸ்பைருலினாவுக்கு அமோக வரவேற்பு இருக்கும். ஸ்பைருலினாவைப் பெரு முதலாளிகள் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வந்தாலும், விவசாயிகள் சிறுதொழிலாகச் செய்யவும் ஏற்றது.
தினசரி வருமானம் தரும் ஸ்பைருலினா பாசி வளர்ப்பு முறையை எளிமையாக விளக்குகிறார் புதுக்கோட்டையைச் சேர்ந்த தமிழ்நாடு அறிவியல் ஆராய்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் ச. விஜிகுமார்:

**வளர்க்கும் முறை**

முதலில் சமமான இடத்தில் 18 அடி நீளம், 12 அடி அகலத்துக்குச் சுத்தம் செய்து, அதில் ஒரு இஞ்ச் உயரத்துக்கு மணல் இட வேண்டும். பின்னர், நான்கு புறங்களிலும் 2 அடி உயரத்துக்கு 12 கட்டைகளை ஊன்றி அதன் உள்பகுதியில் தார்ப்பாயை வைத்துக் கட்டைகளில் பாயை ஆணியால் அடித்துத் தொட்டியைத் தயார் செய்துகொள்ள வேண்டும். அரை கிலோ கல் உப்பைத் தண்ணீரில் கரைத்துத் தொட்டியில் தெளித்துத் தொட்டியைச் சுத்தம் செய்த பிறகு, ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்ட தண்ணீரைத் தொட்டியில் 23 செ.மீ. மீட்டருக்கு விட வேண்டும் (சுமார் 750 லிட்டர்). பின்னர், 7,500 கிலோ பொட்டாசியம் பை கார்பனேடைத் தொட்டியில் இட்டுத் துடுப்பால் கலக்க வேண்டும். இதைத் தொடர்ந்து 4,750 கிலோ கல் உப்பு, 190 கிராம் யூரியாவை இட்டுக் கலக்க வேண்டும். ஒரு கிலோ ஃபெரஸ் சல்பேட், ஒரு லிட்டர் நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலம் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தயாரிக்கப்பட்ட ஃபெரஸ் சல்பேட் கரைசலில் இருந்து 47.5 மி.லியும், 49.4 மி.லி. பாஸ்பாரிக் அமிலத்தையும் கையுறை அணிந்து தொட்டியில் கவனமாகத் தெளிக்க வேண்டும். தண்ணீரின் பி.எச். அளவு 10.5-ம், தண்ணீரின் அடர்த்தி 1.010-லிருந்து 1.020 வரை இருப்பதை

உறுதி செய்துகொள்ள வேண்டும். பூனம் சேலையை இரண்டாக மடித்து அதில் 750 கிராம் உயிருள்ள தாய்ப்பாசியை இட்டுச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு, அதைத் தொட்டித் தண்ணீரில் ஆங்காங்கே மூழ்கச் செய்து பாசியை விடவேண்டும். தினமும் 10 முறை கலக்கி விடுவது அவசியம்.

**பாசி எடுக்கும் முறை**

தொட்டியில் படிந்துள்ள கழிவுகளை அகற்றத் தினமும் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் சேலையைக் கொண்டு இருவர் தொட்டியின் அடிப்பகுதியிலிருந்து அரித்து எடுத்து (துண்டு மூலம் மீன் பிடிப்பது போல) சேலையின் மேல் பகுதியில் வெள்ளை நிறத்தில் படியும் கழிவுகளை அகற்ற வேண்டும். இறுதியாக 8 - 9-வது நாளில் அறுவடை செய்வதற்குத் தொட்டியின் மேற் பகுதியில் குறுக்காக இரண்டு கட்டைகளை வைத்து அதில் சல்லடையையும் அதன் மேல் சேலை யையும் விரித்து வைத்து, அதன்மீது தொட்டியின் மேல் பகுதியில் மிதக்கும் பாசியை ஜக் மூலம் தண்ணீரோடு எடுத்து ஊற்ற வேண்டும். அப்போது, கழிவுகள் சேலையிலும், பாசி சல்லடையிலும் தங்கிவிடும். தண்ணீர் மீண்டும் தொட்டிக்குச் சென்றுவிடும். இதேபோன்று தினமும் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்னதாக அறுவடை செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் அறுவடை செய்த பிறகு, மீண்டும் முதல்முறையாக இடப்பட்ட ஊட்டத்தின் அளவில் பாதியை இடவேண்டும். அறுவடை செய்யப்பட்ட பாசியைத் தண்ணீர் விட்டுக் கழுவி நிழலில் உலர்த்திக் காயவைத்துப் பயன்படுத்தலாம். அறுவடை செய்யப்பட்ட பாசியில் புரதம் 65 சதவீதம் இருந்தால் மனிதப் பயன்பாட்டுக்கும், 65-50 சதவீதம்வரை இருந்தால் கால்நடைகளுக்கும், 50 சதவீதத்துக்குக் குறைவாக இருந்தால் மீனுக்கும் கொடுக்கலாம். பாசியை வேகவைக்கக் கூடாது. சிறுநீரக நோயாளிகளைத் தவிர அனைவரும் இதைச் சாப்பிடலாம். இவ்வாறு ஒரு நாளைக்குச் சுமார் 500 கிராம் அறுவடை செய்யலாம். கிலோ சுமார் ரூ. 3000-க்கு விற்பனை செய்யப்படுகிறது.**ச. விஜிகுமாரைத் தொடர்புகொள்ள: 99528 86637**

<u>**இனிக்கும் சிவப்புக் கவுணி**</u>



சோழர் காலம் முதல் இன்றுவரை மக்கள் பயன்பாட்டில் இருந்துவரும் நெல் ரகம் சிவப்புக் கவுணி. விவசாயத் தொழிலாளர்கள் சாப்பாட்டுக்கு இந்த ரகத்தை நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இதன் அரிசியை ஒரு வேளை உட்கொண்டால், நாள் முழுவதும் களைப்பில்லாமல் பணி செய்ய முடியும்.

**அற்புத ரகம்**

அது மட்டுமில்லாமல் சுவையான பலகாரங்கள் செய்ய உதவும் இந்த நெல் வகை, சிவகங்கை மாவட்டத்தைத் தாயகமாகக் கொண்டது. தமிழகம் முழுவதும் மானாவாரி பகுதிகளில் பயிரிடப்படுகிறது. செம்மண் பகுதியிலும் அதிக மகசூல் தரக்கூடியது. நேரடி விதைப்புக்கு ஏற்ற இந்த ரகம், 140 நாள் வயதுடையது. வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி வளர்வதுடன் களைகளைக் கட்டுப்படுத்தும் தன்மையும் கொண்டது. ராசாயன உரங்களும், பூச்சிக்கொல்லிகளும் இந்த ரகத்துக்குத் தேவையில்லை. அப்படிப் பயன்படுத்தினால் கதிர் முற்றுவதற்கு முன்பாகவே சாய்ந்துவிடும். ஏக்கருக்கு 25 மூட்டை மகசூல் குறையாமல் கிடைக்கும். 60 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல் ரூ. 1250க்கு விலை போகிறது. இப்படிக் குறைந்த செலவில் அதிக மகசூலும் லாபமும் பெறலாம்.

**கவுணி பலகாரங்கள்**

சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் இனிப்புப் பலகாரம் செய்வதற்குச் சிவப்புக் கவுணி அதிகம் பயன்படுத்தப்படுகிறது. செட்டி நாட்டு சமையலில் இடம்பெறும் சிறப்பு இனிப்பு, கவுணி அரிசி இனிப்புதான். மங்களகரமான நிகழ்ச்சிகள் அனைத்திலும் அவசியம்

இடம்பெறும். திருமணமான புதுத் தம்பதிகளுக்குத் தரப்படும் நீண்ட உணவுப் பட்டியலில் சிவப்புக் கவுணி அல்வா முக்கியமானது. முஸ்லிம் வீட்டுத் திருமணப் பிரியாணி செரிப்பதற்காக உடன் தரப்படும் ஒரு வகை இனிப்பு, சிவப்புக் கவுணி அரிசியில் செய்யப்படுகிறது. பிறந்த 16-ம் நாள் காப்பரிசி, காது குத்துக்குக் காப்பரிசி ஆகியவற்றுக்கு இந்த அரிசியே பயன்படுத்தப்படுகிறது.

**தாய் சேய் நலம்**

சிவப்புக் கவுணி மருத்துவக் குணங்கள் நிறைந்தது. குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். பிரசவத்துக்குப் பிறகு தாய்மார்கள் இந்த அரிசியைத் தொடர்ந்து உண்பதன் மூலம் தாய்க்கும் குழந்தைக்கும் நோய் எதிர்ப்பு சக்தி, ஆரோக்கியம் கிடைக்கும். தற்போது பசுமை அங்காடிகளில் இந்த ரகம் கிடைக்கிறது. புழுங்கல் அரிசியைவிடப் பச்சரிசி சிறந்தது. **நெல் ஜெயராமனைத் தொடர்பு கொள்ள:** *9443320954.*

## <u>'விவசாயத் தொழிற்சாலை செய்வோம்!' - அடிகளாரின் இயற்கை வேளாண் ஆர்வம்</u>



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடமிருந்து “விவசாயத் தொழிற் சாலைகளை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அவற்றை உருவாக்க இந்தக் காலத்து இளைஞர்கள் முன்வர வேண்டும்'' என்று அருவி போல் வந்து விழுகின்றன வார்த்தைகள். அடிகளார் ஆன்மிகக் குரு மாத்திரமல்ல. சிறந்த விவசாயியும்கூட. லேசாய் ரெண்டு மழை தூறல் விழுந்துவிட்டாலே, ''ஐயா... மழை பெஞ்சிருக்கே... என்ன பண்ணலாம்?'' என்று வேளாண் ஆராய்ச்சி மைய அதிகாரிகளிடம் போனில் விசாரிக்க ஆரம்பித்துவிடுவார் அடிகளார். அவர்கள், சூழலுக்கு ஏற்ற இயற்கை விவசாயத்தை அடிகளாருக்குப் பரிந்துரைப்பார்கள்.

மறுநாளே வயலில் நிற்பார் அடிகளார். குன்றக்குடியில் உள்ள வேளாண் ஆராய்ச்சி மையம்தான் அவரை விவசாயத்துக்கு இழுத்து வந்தது.

**சொந்தப் பயன்பாடு**

குன்றக்குடி திருமட வளாகத்துக்குள்ளேயே சுமார் 5 சென்ட் நிலத்தில் காய் - கனித் தோட்டம். நச்சு கலக்காத இயற்கை விவசாயத்தில் பீட்ரூட், நூல்கோல் எனப் பல காய்கறிகளை இங்கே பயிரிடுகிறார்கள். இவை அனைத்தும் மடத்தின் அன்றாட அன்னதானத்துக்குப் பயன்படுத்தப் படுகின்றன. குன்றக்குடிக்குப் பக்கத்தில் உள்ள விரியன் வயலில் சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் நெல்லும் விளைகிறது. குத்தகை நிலங்களில் இருந்து நெல் வந்துவிடுவதால், சொந்த வயலில் நெல்லை இரண்டாம்பட்சமாகத்தான் வைத்திருக்கிறார் அடிகளார். மடத்துக்குச் சொந்தமான வயல்களில் கரும்பு, மஞ்சள் சாகுபடியும் நடக்கிறது. இவை எதுவும் விற்பனைக்கு அல்ல; எல்லாமே மடத்தின் சொந்தப் பயன்பாட்டுக்குத்தான்.

**தென்னை பாசம்**

மடத்துக்குச் சொந்தமான தென்னந் தோப்புகளில் சுமார் பத்தாயிரம் தென்னை மரங்கள் இருக்கின்றன. இந்தத் தென்னை மரங்களை அடிகளார் பெரிதும் நேசிக்கிறார். பொள்ளாச்சி பக்கம் போனால் அங்குள்ள தென்னை மரங்களைப் பார்த்துவிட்டு, “இங்க இருக்கிற மரங்கள் மட்டும் எப்படி இவ்வளவு மகசூல் கொடுக்குது பார்" என்று தன் உதவியாளர் சிங்காரவடிவேலனிடம் ஆச்சரியத்தைப் பகிர்ந்துகொள்வார். இப்போது, கொட்டாம்பட்டி அருகில் உள்ள மேலப்பட்டி தென்னந் தோப்பில் 200 தென்னங்கன்றுகளைச் சிறப்புக் கவனம் எடுத்து வளர்க்கிறார்கள். வறட்சிப் பகுதிகளிலும் நல்ல மகசூல் கொடுக்கும் தென்னை ரகங்களைக் கேரளாவில் உள்ள தென்னை ஆராய்ச்சி மையம் செயற்கைக் கருவூட்டல் மூலம் உருவாக்கி இருக்கிறது. இதற்கான களமாக இந்தத் தோப்பைத்தான் அந்த நிறுவனம் பயன்படுத்திக் கொண்டது. அவர்கள் உருவாக்கிய சிறப்பு விதையில் முளைத்ததுதான்

அந்த 200 தென்னங்கன்றுகள். இங்குள்ள தென்னைகளைச் செயற்கைக் கருவூட்டலுக்காக இன்னமும் பயன்படுத்தி வருகிறது கேரள ஆராய்ச்சி நிறுவனம்.

**இளைஞர்களுக்கு அழைப்பு**

''தேசத்துக்கு முதுகெலும்பு போன்றது விவசாயம். மனநிறைவு தரும் ஆத்மார்த்தப் பணி அது. மருத்துவ வசதிகள் பெருகப் பெருக நோய்களின் தாக்கமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பூச்சி மருந்து, உரம் இவற்றில் உள்ள மாசுதான் இதற்கு முக்கியக் காரணம். எனவே, நச்சுப் படாத விவசாயம்தான் இந்தக் காலத்துக்குத் தேவை. எவ்வளவு ஏக்கரில் பயிர் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. எத்தகைய பயிர்களை, எப்படிப் பயிர் செய்கிறோம் என்பதுதான் முக்கியம். எனவே, குறைவான நிலப்பரப்பில் நிறைவான மகசூல் தரும் ஒருங்கிணைந்த விவசாயத் தொழிற்சாலைகளை உருவாக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்'' என்கிறார் பொன்னம்பல அடிகளார்.